சொல்கிறார்கள் என்று நாங்கள் அனுமதித்துக்கொண்டிருக்கிறோம். வாழ்த்துச் சொல்வதோடு நின்றுவிட்டால் பரவாயில்லை. பெரிய புள்ளிவிவரத்தை, ஏதோ பத்திரிகையிலே வந்திருக்கிற செய்தியை வைத்துக்கொண்டு, அன்றைய தேர்தலுக்கும், இன்றைக்கு இருக்கிற நிலைமையையும் பற்றி ஒரு புள்ளிவிவரத்தைச் சொல்வது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று. ஆகவே, இதுபோன்று நீங்கள் அனுமதி அளிப்பது என்பது இந்தச் சபையின் மரபுக்கு ஏற்றதாக இருக்காது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

6. அறிக்கை அளித்தல்

பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கை அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006–2007 ஆம் ஆண்டுக்கான பொதுக் கணக்குக் குழுவினுடைய முதலாவது அறிக்கையைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

2006 செப்டம்பர் 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

முற்பகல் 10–35

8. மானியக் கோரிக்கைகள், 2006–2007, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 1 – மாநிலச் சட்டமன்றம்

(ஆ) கோரிக்கை எண் 2 – ஆளுநர் மற்றும் அமைச்சரவை

(இ) கோரிக்கை எண் 16 – நிதித் துறை

(ஈ) கோரிக்கை எண் 36 – திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை

(உ) கோரிக்கை எண் 50 – ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்

(அ) கோரிக்கை எண் 1–மாநிலச் சட்டமன்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2006–2007 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 1–மாநிலச் சட்டமன்றம், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*